பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 09 | சனிக்கிழமை | 22.06.2024 | அதிர்வு 326

## ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம் நடைபெறும்

### ராஜிதவிடம் ரணில் உறுதி

“உரிய வகையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்றும், சர்வஜன வாக்கெடுப்பு மூலம் தேர்தலை ஒத்திவைக்கும் எவ்வித எண்ணமும் தன்னிடம் 06

# மன்னாரில் கோர விபத்து! வயோதிபப் பெண் சாவு!!

### 13 பேர் காயங்களுடன் வைத்தியசாலையில்



(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாரில் ஹயஸ் ரக வாகனம் ஒன்று மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணித்த வயோதிபப் பெண்ணொருவர் பலியாகியுள்ளமையுடன் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கல்முனையில் இருந்து மன்னார் – மறிச்சுக்கட்டி பிரதேசத்துக்குப் பயணித்தவர்களின் வாகனமே முருங்கன், இசைமாலை தாழ்வு, நரிக்காடு வளைவு பகுதியில் உள்ள மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. 06

# அரசின் பொது வேட்பாளராக ரணில் களமிறங்க வேண்டும்

### இராஜாங்க அமைச்சர்கள் ஒருமித்த தீர்மானம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அரசின் பொது வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே நிறுத்தப்பட வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர்கள் அனைவரும் ஒரே நிலைப்பாட்டில் உள்ளனர்.

இந்த நிலைப்பாட்டை அவர்கள் மொட்டுக் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளனர் என்று அறியமுடிகின்றது. 06



## பதிவற்ற மோ. சைக்கிள், வாள்களுடன் யாழில் இளைஞர் ஒருவர் நேற்று கைது

### பொலிஸார் பல கோணங்களில் விசாரணை



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் பதிவற்றமோட்டார்சைக்கிள்ஒன்றும், 5 வாள்களும் நேற்று அதிகாலை கைப்பற்றப்பட்டுள்ளன என்று யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். நகர் பகுதியில் விசேட ரோந்துப் பணிகளில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த மோட்டார் சைக்கிளை மறித்துச் சோதனையிட்டனர். 06




‘கொவிட்’ நெருக்கடி காலத்தில் ஜனாதிபதி கோட்டாபயவின் அரசு புரிந்த பெரும் கொடூரம் என்னவென்றால், அந்தத் தொற்றில் உயிரிழந்த அனைவரினதும் உடலங்கள் எரிக்கப்பட்டேயாக வேண்டும், புதைக்கப்படவே கூடாது என்று கட்டாயப்படுத்திய நடவடிக்கைதான்.

நல்லடக்கம் செய்வதைத் தமது மார்க்கக் கடமையாகக் கொண்டிருக்கும் இஸ்லாமியர்களினதும் கிறிஸ்தவர்களினதும் மதக் கடப்பாட்டை வேண்டுமென்றே திட்டமிட்டு நோண்டிப் பார்த்த பேரினவாத வெறித் திமிர்த்தனத்தின் அப்பட்டமான வெளிப்பாடு இந்த கீழ்த்தரமான செயற்பாடாகும்.

உலகில் உள்ள எந்த நாடும் கொவிட்டால் உயிரிழந்தவர்களின் 06

# இலங்கையின் நம்பிக்கையான நண்பனாக எதிர்காலத்திலும் இந்தியா செயலாற்றும்!

## வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவிப்பு

இந்தியா எதிர்காலத்திலும் இலங்கையின் நம்பிக்கையான நண்பனாக செயற்படும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இலங்கை விஜயத்தை நிறைவு செய்து இந்தியா திரும்பியதன் பின்னர் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் பக்கத்தில் அவர் இதனை பதிவிட்டுள்ளார்.

இலங்கைக்கு ஒருநாள் உத்தியோகபூர்வ விஜயம் செய்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கர் நாட்டிலிருந்து நேற்று முன்தினம் மாலை புறப்பட்டுச் சென்றார்.

தனது இந்தப் பதவிக்காலத்தின் முதலாவது பயணமான இலங்கை விஜயம் மிகவும் சிறப்பானதாக அமைந்ததாக இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் பதிவிட்டுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் தனது ஒருநாள் விஜயத்தில், முதலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்திருந்தார். அதன் பின்னர் பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்து கலந்துரையாடினார்.

அத்துடன், இருநாட்டு வெளிவிவகார அமைச்சர்களும் சந்தித்துக் கலந்துரையாடியமையுடன், இதன்போது இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டது.



அதன் பின்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதனையடுத்து, தமிழ் மக்களின் பிரதிநிதிகளையும் இந்திய வெளிவிவகார அமைச்சர் நேற்று முன்தினம் மாலை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் மலையக அரசியல் பிரதிநிதிகளும் இதன்போது பிரசன்னமாகியிருந்தனர்.

# கல்விசாரா ஊழியர்கள் சங்கம் புறக்கணிப்பில் ஈடுபட முடிவு

பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு அகில இலங்கை ஒன்றிணைந்த கல்விசாரா ஊழியர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

அரச பாடசாலைகளில் உள்ள கல்வி சாரா ஊழியர்களின் தொழிற்சங்க பிரச்சினைகளுக்கு, அரசாங்கம் இதுவரை தீர்வு வழங்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த சங்கம் பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ளவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 24, 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அகில இலங்கை ஒன்றிணைந்த கல்விசாரா ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் குமுது கட்டபொலுகே தெரிவித்துள்ளார்.

இதன்போதும் எவ்வித தீர்வுகளும் முன்வைக்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் தொடர் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கவும் தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இராமேஸ்வரம் கரையில் கைதான புத்தளம் மீனவர்கள் மீது சந்தேகம்!

## தமிழகப் பொலிஸார் தீவிர விசாரணை

(ந.லோகதயாளன்)

இந்தியாவின் இராமேஸ்வரம் கரையில் கைது செய்யப்பட்ட புத்தளத்தைச் சேர்ந்த மீனவர்கள் இருவர் பயணித்த படகு முதல் நாள் நெடுந்தீவில் நின்றது என்று ஜி.பி.எஸ். சாதனத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புத்தளத்தில் இருந்து மீன்பிடிக்கப் புறப்பட்டு திசை மாறிப் பயணித்துவிட்டதாகக் கூறி புத்தளத்தைச் சேர்ந்த இருவரை இராமேஸ்வரம் கடற்கரையில் நின்ற சமயம் நேற்றுக் காலை தமிழகப் பொலிஸார் கைது செய்தனர்.

மேற்படி இருவரும் திசை மாறிப் பயணித்ததாகத் தெரிவித்தபோதும் இந்தியப் பொலிஸார் இவர்கள் மீது சந்தேகம் கொண்டுள்ளனர்.

புத்தளத்தைச் சேர்ந்த இருவரும் பயணித்த படகில் எந்தவொரு மீனோ அல்லது மீன்பிடி உபகரணங்களோ காணப்படாததோடு இரு கான்களில் 55 லீற்றர் எரிபொருள் காணப்படுவதனால் அவை இந்தியாவுக்குப் பயணித்து புத்தளம் திரும்புவதற்குப் போதுமானதாகவும் கருதப்படுகின்றது. இதன் அடிப்படையில் தமிழகப் பொலிஸார் அதிக சந்தேகம் கொண்டுள்ளனர்.




சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட புத்தளம் மீனவர்கள் இருவரும் பயன்படுத்திய கைத்தொலைபேசி இலக்கங்களும் அழிக்கப்பட்டுள்ளதால் நீண்ட விசாரணையின் பின்னர் அவர்கள் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.







# பொசனை முன்னிட்டு 125 பேருக்கு யாழில் நேற்று கண்புரை சிகிச்சை

பொசன் பண்டிகை தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் 125 இற்கும் மேற்பட்டவர்களுக்கு நேற்று கண்புரை சிகிச்சையளிக்கப்பட்டது.

அலாக்கா மற்றும் ஆனந்தா பவுண்டேசனின் பங்களிப்புடன் 51 இராணுவப் படைப்பிரிவின் உதவியுடன் குறித்த கண் நோயாளர்களுக்கான சிகிச்சை வைத்திய கலாநிதி மலரவனின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது யாழ்ப்பாண நாகவிகாரையின் விகாராதிபதி தலைமையில் பொசன் ஆராதனை நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ் மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி, வடக்கு மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர், வைத்தியர்கள் தாதியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.














# சீரற்ற காலநிலையினால் சேதமடைந்த வீடுகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கு ஜனாதிபதி அறிவுறுத்தல்

சீரற்ற வானிலையினால் முற்றிலும் சேதமடைந்த வீடுகளுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி, இழப்பீடு வழங்குவதற்கு அல்லது வீடுகளை மீள நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார் என தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

பகுதியளவில் சேதமடைந்த வீடுகளை புனரமைப்பதற்காக, மதிப்பீடுகளை முன்னெடுத்து அதிகபட்ச வரையறைக்கு உட்பட்டு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் குறிப்பிட்டார்.

சீரற்ற வானிலையினால் முழுமையாகவும் பகுதியளவிலும் சேதமடைந்த வீடுகளை புனரமைப்பது தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, அனர்த்தங்களினால் முழுமையாகவும் பகுதியளவிலும் சேதமடைந்த வீடுகள் தொடர்பான முறையான அறிக்கையை பெற்றுக்கொடுக்குமாறு சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர்களுக்கு சாகல ரத்நாயக்க மேலும் ஆலோசனை வழங்கியுள்ளார்.





















# கடந்த கால துன்பங்களை யாரும் மறந்துவிடக்கூடாது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

"மருந்துகள், எரிபொருள், உரம் கிடைக்காமல் துன்பப்பட்ட கடந்த காலத்தை யாரும் மறந்துவிடக்கூடாது. இவ்வாறான இருண்ட அனுபவத்தை அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்லாமல், புதிய பொருளாதார மாற்றத்தின் ஊடாக இலங்கையை கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தில் அனைவரும் இணைந்துகொள்ள வேண்டும்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் 9 ஆவது மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"கடந்த கொரோனா தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடியின் போது தப்பியோடாமல், நாட்டுக்காக தமது பொறுப்புகளை நிறைவேற்றிய மருந்தக உரிமையாளர்கள் சங்கத்திற்கு வாழ்த்துக்கள்.

இலங்கையை வழிநடத்தும் திட்டம் சரியானதென சர்வதேச நாணய நிதிய பணிப்பாளர்கள் குழுவின் இரண்டாம் சுற்று கலந்துரையாடலில் சான்றுப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி கடனைச் செலுத்த கால அவகாசம் கிடைத்துள்ளது. தற்போது சீனாவுடன் கலந்துரையாடி வருகின்றேன்.

பாரிஸ் கிளப்பில் உள்ள நாடுகள் மற்றும் ஏனைய கடன் வழங்குனர்களுடன் கலந்துரையாடி உடன்பாட்டை எட்டவும் எதிர்பார்க்கின்றோம்.

நிலைமையை சரிசெய்து புதிய பொருளாதாரத்தை நோக்கி நாட்டை கொண்டு செல்லாத பட்சத்தில், மீண்டும் வீழ்ச்சியை சந்திக்க நேரிடும்.

போட்டி நிறைந்த பொருளாதாரத்தை உருவாக்கி, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, புதிய நாட்டை உருவாக்க வேண்டும்." – என்றார்.









## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உடலங்கள் புதைக்கப்படகூடாது, கட்டாயம் எரிக்கப்பட வேண்டும் என்று பலவந்தப் படுத்தவில்லை – கோட்டாபய ராஜபக்ஷவின் அரசைத் தவிர.

கொவிட் தொற்றுக் காலத்தில் அந்தத் தொற்று உட்பட்ட விஞ்ஞான ஆய்வுகளில் இலங்கையின் தரத்தை விடப் பல மடங்கு உச்ச தரத்தில் இருந்த எந்த நாட்டுக்கும் தோன்றாத அந்தக் கட்டுப்பாட்டு விதிமுறை, இலங்கையில் இருக்கும் விஞ்ஞான 'அறிஞர்களுக்கு'(?) மட்டும் வந்தது எங்ஙனம்? இலங்கையில் யார் அதன் சூத்திரதாரி? மக்கள் அவர்களை அறிய வேண்டும்.

இவ்விடயத்தை ஒட்டிய – சம்பந்தப்பட்ட – துறை சார் ஆலோசனைக் குழு வழங்கிய வழிகாட்டல்படியேயே அந்த விதிமுறை அப்போது நடைமுறைப்படுத்தப்பட்டதாக இப்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் கூறிச் சமாளிக்க முயல்கிறார்.

சரி. அப்படி என்றால் அந்தத் துறை சார் நிபுணர் குழுக் கட்டமைப்பின் பெயர் என்ன? அதில் அங்கம் வகித்தவர்கள் யார்? யார்? அவர்களின் தார தம்மியம் யாது? – என்ற உண்மைகளையாவது – இப்போதாவது – காலம் கடந்தாவது – அரசு வெளிப்படுத்த வேண்டும் என்று பல தரப்புகளாலும் இப்போது கோரிக்கை முன்வைக்கப்படுகிறது.

அந்த நிபுணர் குழுவில் அங்கம் வகித்த 'பிரகிருதிகள்' யார் என்பதை மக்கள் அறிய வேண்டும். உலக நாடுகளில் வேறு விஞ்ஞான ஆய்வாளர்கள், அறிவி ஜீவிகள், விஞ்ஞானிகளுக்கு தெரியாத சில நுணுக்கங்கள் இந்த ஆலோசனை வழங்கிய நிபுணர் குழுவுக்கு தெரிந்திருக்க வேண்டும், அதனால்தான் உலகின் வேறு எங்கும் நடைமுறைப்படுத்தாத ஒரு விதியை – கொவிட்டில் உயிரிழப்போரின் உடலங்களைப் புதைக்க கூடாது, எரிக்க வேண்டும் என்ற சட்டத்தை – இப்படி அவர்கள் கொண்டு வந்திருக்க வேண்டும்.

பேரினவாத வெறியில் தோய்ந்த அந்த இனவாதக் கும்பலின் 'மூளைகள்' இனியாவது சோதித்துப் பார்க்கப்பட வேண்டும்.

கொவிட் தொற்றுப் பேரிழப்பு நலிவுக்கு மத்தியிலும் இனவாதம் புரிந்த அந்த நிபுணர் குழுவின் உண்மை முகம் அம்பலப்படுத்தப்பட வேண்டும்.

முஸ்லிம் மக்களின் ஜனாஸாக்களை கட்டாயப்படுத்தி எரியூட்டும் கொடூரம் குறித்து விசாரித்து, உண்மைகளை அம்பலப்படுத்துவதற்கு ஜனாதிபதி ஆணைக் குழு ஒன்றை நியமியுங்கள் எனக் கோரியிருக்கின்றார் கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் ஐ.ஏ.கலிலூர் ரஹ்மான்.

எது,எதற்கோவெல்லாம் ஆணைக் குழு அமைத்து, காலத்தை இழுத்தடிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் விசாரிக்கப்பட வேண்டியது என்ற நியாயமான காரணங்களை கொண்ட இந்த விடயத்துக்கு ஓர் ஜனாதிபதி ஆணைக் குழுவை அமைக்க முன் வருவாரா?

## அரசின் பொது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த நிலைப்பாட்டின் மூலம் மொட்டுக் கட்சிக்குள் பிளவு ஏற்படாது என அவர்கள் கூறியுள்ளனர் என்றும் தெரிய வருகின்றது.

இதேவேளை, மொட்டுக் கட்சி தனியான வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்று அக்கட்சிக்குள் சிலர் கூறி வருகின்றனர். சிலர் நாமல் ராஜபக்ஷவை வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்றும் கூறுகின்றனர்.

## ஜனாதிபதித் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இல்லை என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்னிடம் உறுதியாகக் கூறினார்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் கருத்து வெளியிட்டுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதியிடம் வினவினேன். ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் எவ்வித திட்டமும் இல்லை என்றும், தேர்தல் உரிய வகையில் நடத்தப்படும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

அடுத்தது ஜனாதிபதியின் பதவிக் காலம் நீடிப்பு பற்றியும் தகவல்கள் வெளியாகின. அது பற்றியும் வினவினேன். அவ்வாறு எவ்வித திட்டம் இல்லை என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வெற்றியோ, தோல்வியோ நிச்சயம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும். தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பில் பெரும்பாலானவர்கள் இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை."

– என்றார்.

## பதிவற்ற மோ.சைக்,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது குறித்த மோட்டார் சைக்கிள் வாகனப் பதிவு இன்றி பயணித்தமை தெரியவந்தது.

இதையடுத்து சந்தேகநபரான நவாலி பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்தனர்.

இதன்போது சந்தேகநபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் பல்வேறு திடுக்கிடும் தகவல்கள் பொலிஸாருக்குத் தெரியவந்துள்ளது.

இதற்கமைய மேற்படி சந்தேகநபரின் வீட்டிலிருந்து ஐந்து வாள்களையும் பொலிஸார் மீட்டுள்ளதுடன் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மன்னாரில் கோர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த 14 பேர் முருங்கன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 7 பேர் மேலதிக சிகிச்சைக்காக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

அவர்களில் வயோதிபப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

ஹயஸ் ரக வாகனத்தில் பயணித்தவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்கள் எனத் தெரியவந்துள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.












# நெடுந்தீவு இளைஞரின் படுகொலைக்கு நீதி கோரி பொலிஸ் நிலையம் முன் கவனவீர்ப்புப் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். நெடுந்தீவு பகுதியில் படுகொலை செய்யப்பட்ட இளைஞருக்கு நீதி வேண்டி நெடுந்தீவு பொலிஸ் நிலையம் முன் மக்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இரு தரப்பினருக்கிடையிலான மோதலில் நெடுந்தீவு, ஏழாம் வட்டாரத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் அதிகாலை சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

பிரேத பரிசோதனையின் பின் நேற்றுமுன்தினம் இரவு சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்ட நிலையில் நேற்று இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று அதன் பின்னர் சடலம் நல்லடக்கத்துக்காகச் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இதன்போது மக்கள் சடலத்தையும் தோள்களில் சுமந்தவாறு நெடுந்தீவு பொலிஸ் நிலையம் முன்பாக நீதி வேண்டி கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்

இளைஞர் கொலையுடன் சம்பந்தப்பட்ட சந்தேகநபர் ஒருவர் ஏற்கனவே நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்ற நிலையில், இக்கொலையுடன் சம்பந்தப்பட்ட ஏனைய மூவரையும் விரைவாகக் கைது செய்யுமாறு கோரி நெடுந்தீவு மக்கள் சடலத்துடன் நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, "பொலிஸாரே தூக்கமா, படுகொலைக்கு நீதி வேண்டும், குற்றவாளிகளைக் கைது செய், பொலிஸாரே விழித்துக் கொள்" உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் தாங்கியவாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வாறு பெருமளவான மக்கள் நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அங்கு பெருமளவான பொலிஸாரும் திரண்டிருந்தமையால் அப்குதியில் பெரும் பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டது.

பொலிஸார் அசமந்தப்போக்கு காட்டுவதாகக் கூறி பொலிஸாருடன் முரண்பட்ட மக்கள், கொலையுடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் உடனடியாகக் கைது செய்து நீதியை நிலைநாட்ட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர். அதன்பின்னர் அங்கிருந்து கலைந்து சென்ற மக்கள், சடலத்தை சேமக்காலையில் நல்லடக்கம் செய்தனர்.















# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நடக்குமா தேர்தல்?

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் திட்டமிட்டபடி வரும் செப்டெம்பர் மாத இறுதியில் அல்லது ஒக்டோபர் மாத முற்பகுதியில் நடத்தப்பட்டேயாக வேண்டும் எனத் தேர்தல்கள் தொடர்பான இரண்டு பெரிய 'தலைகள்' அடித்துக் கூறியிருக்கின்றன.

ஒருவர் தற்போதைய தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க. மற்றவர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய.

"ஜனாதிபதித் தேர்தலை இந்த வருடமே நடத்த வேண்டும். அந்தத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான அடிப்படை நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

"ஜனாதிபதித் தேர்தல் என்பது குறிப்பிட்ட காலக்கெடுவைக் கொண்ட தேர்தல். அதை ஒத்திவைக்க முடியாது." - என்று தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதித் தேர்தலை செப்டெம்பர் மாதம் 20ஆம் திகதிக்கும் ஒக்டோபர் மாதம் 16ஆம் திகதிக்கும் இடையில் கட்டாயமாக நடத்த வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரியவும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

கொழும்பில் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டிருந்தார்.

"இந்தத் தேர்தலை பிற்போட முடியும் என எவரேனும் கூறினால், அவர்களின் மூளையைப் பரிசோதனைக்குட்படுத்திப் பார்க்க வேண்டும்.

"எக்காரணத்தினாலும் தேர்தலை பிற்போடுவது என்பது தவறு. வானமே இடிந்து தலைமேல் விழுந்தாலும் அதிபர் தேர்தலை மட்டும் பிற்போட முடியாது" - என்று வேறு அவர் கூறியிருக்கின்றார்.

இலங்கையின் தேர்தல்கள் தொடர்பில் அதிக அனுபவம் கொண்ட இவர்கள் இருவரும் இலங்கையின் தேர்தல் சட்டங்கள், அரசமைப்பு ஏற்பாடுகள், ஒழுங்குமுறைகள் குறித்து அதிக பரிச்சயமும் அனுபவம் கொண்டவர்கள். ஆனால் இலங்கையின் அரசியல் போக்கு குறித்து அவதானமும் அனுமானமும் கொண்டவர்களா என்ற கேள்வியை அவர்களின் மேற்படி கருத்துக்கள் எழுப்பி நிற்கின்றன.

மேற்படி கருத்தை வெளியிட முன்னர் மூன்று விடயங்களை அவர்கள் இருவரும் கவனிக்கவில்லையோ என்ற சந்தேகம் தோன்றுகின்றது.

ஒன்று - ஜனாதிபதி தேர்தலை நடத்துவது தொடர்பாக தேர்தல் ஆணைக் குழுவுக்கு அதிகாரங்களை எந்த அரசமைப்பு வழங்கியதோ அந்த அரசமைப்புத்தான் உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கான அதிகாரங்களையும் தேர்தல் ஆணைக்குழுக்கு வழங்கி இருக்கின்றது.

அறிவிக்கப்பட்டு, வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பகுதி அளவில் வாக்குச்சீட்டுகளும் அச்சிடப்பட்டுவிட்ட உள்ளூராட்சி தேர்தலை நடத்த முடியாமல் - நடத்த வக்கற்று - அல்லற்படும் தேர்தல் ஆணையகத்துக்கு ஒன்றரை வருடங்கள் தாண்டியும் கூட அதை நடத்தி வைக்கும் இயலுமை இல்லை என்பது அப்பட்டமான உண்மை. அதே நிலை ஜனாதிபதி தேர்தலுக்கு நடக்காமல் இருப்பதற்கு என்ன விசேட அதிகாரம் - காப்பரண் - பாதுகாப்பு - உள்ளது என்பதைத் தேர்தல் ஆணையகத் தரப்புகள் இன்னும் வெளிப்படுத்தவில்லை.

அடுத்தது - தேர்தல் தொடர்பாக இவர்கள் கூறுவது இன்றைய அரசமைப்பு ஏற்பாடுகளின் நிலைமை. தற்போதைய அரசமைப்பை 21 தடவைகள் திருத்தியும், மாற்றியும் அமைத்த நம் அரசியல் தலைமைகளுக்கு அடுத்த திருத்தத்தை நாளை கொண்டு வந்து எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றுவது அப்படி ஒன்றும் கஷ்டமானது அல்ல.

மூன்றாவது - ஆட்சியாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் குள்ளநரித்தனத்தை அவர்கள் இருவரும் கவனத்தில் எடுக்கவில்லையோ என்றும் தோன்றுகின்றது.

ஜனாதிபதி தேர்தல் திட்டமிட்டபடி நடந்தால் சந்தோஷம்தான். ஆனால் நடக்க விடுவாரா அதி உத்தமர் என்பது சந்தேகம்தான்.



# கொழும்பில் முறிந்து விழும் மரங்கள்; நிலத்தடி தன்மையை ஆராய தீர்மானம்

கொழும்பில் முறிந்து விழும் அபாய நிலையில் இல்லாத மரங்களின் வேர்கள் மற்றும் நிலத்தடி தன்மை என்பன தொடர்பில், புதிய ஆய்வொன்றை நடத்துவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர ஆணையாளர் பத்ராணி ஜயவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலையினால் கொழும்பில் அண்மைக்காலமாக முறிந்து வீழ்ந்த பெரும்பாலான மரங்கள், முறிந்து விழக்கூடிய அபாய நிலையில் இருந்திருக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கொழும்பு நகரில் மாத்திரம் 500 மரங்கள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட நிலையில் அவற்றில் 200 பழமையான மரங்கள் முறிந்து விழக்கூடிய அபாய நிலையில் இருந்தமை கண்டறியப்பட்டது.

இதுவரையான காலப்பகுதியில் அவற்றில் 160 மரங்கள் வெட்டப்பட்டுள்ளன.

ஏனைய ஆபத்தான மரங்களை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

குழாய் நீர் பொருத்துதல் மற்றும் ஏனைய பணிகளின் போது மரங்களின் வேர்கள் பாதிக்கப்படும் என்பதால் அவை குறித்து அவதானம் செலுத்தப்படுகின்றது.

எதிர்காலத்தில் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் உதவியுடன் அதற்கான ஆய்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்கு அதி நவீன தொழில்நுட்பக் கருவிகளும் தேவைப்படுகின்றன." – என்றார்.



# ஒரு மில்லியன் பயணிகளை வரவேற்கும் சுற்றுலாத்துறை

இலங்கைக்கான வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை, முதல் அரையாண்டு காலப்பகுதியில் ஒரு மில்லியனை கடக்கும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாதத்தின் முதல் 19 நாள்களில் 69 ஆயிரத்து 825 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

இதற்கமைய இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 9 லட்சத்து 66 ஆயிரத்து 825 சுற்றுலாப் பயணிகள் இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

# கள்ளச் சாராய சம்பவத்தில் சி.பி.ஐ. விசாரணை தேவை

## சட்டப்பேரவையில் இருந்து வெளியேற்றப்பட்ட பின் இ.பி.எஸ். கருத்து



கள்ளக்குறிச்சி கள்ளச் சாராய விவகாரத்தில் சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

கள்ளக்குறிச்சி கள்ளச் சாராய மரணங்கள் தொடர்பாக சட்டப்பேரவையில் நேற்று அ.தி.மு.க, பா.ம.க, பா.ஜ.க. ஆகிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர்.

இதையடுத்து சபாநாயகர் அப்பாவு அ.தி.மு.கவின் எம்.எல்.ஏக்களை வெளியேற்ற உத்தரவு பிறப்பித்தார். அதன்படி, அ.தி.மு.கவினர் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.

தொடர்ந்து சட்டப்பேரவைக்கு வெளியே செய்தியாளர்களை சந்தித்த எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி,

"கள்ளக்குறிச்சியில் கள்ளச் சாராயம் குடித்து 50 பேர் உயிரிழந்தனர். மேலும் 96 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். புதுச்சேரியில் 16 பேர் கவலைக்கிடமாக உள்ளனர். இதனையெல்லாம் சட்டப்பேரவையில் பேச வேண்டும் என அனுமதி கேட்டோம். ஆனால், சபாநாயகர் அனுமதி மறுத்துவிட்டார்.

கள்ளக்குறிச்சி மரணங்கள் நெஞ்சை பதறவைக்கும் சம்பவம். மக்கள் கொதிப்படைந்துள்ள இந்த சம்பவத்தை கூட சட்டமன்றத்தில் பேச வாய்ப்பளிக்கவில்லை என்றால், சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டதற்கே அர்த்தம் இல்லாமல் போய்விடும். எதிர்க்கட்சி என்ற முறையில் மக்களின் பிரச்சினைகளை அரசின் கவனத்துக்கு கொண்டு வருவது எங்களின் கடமை. அந்த அடிப்படையில் தான் இன்று சட்டப்பேரவை கூடியதும் கள்ளக்குறிச்சி கள்ளச் சாராய மரணங்கள் குறித்து பேச அனுமதி கேட்டோம்.

கள்ளச்சாராயம் குடித்து ஏழை, எளிய மக்கள் உயிரிழந்துள்ளார்கள். அவர்களுக்கு இந்த அரசு முறையாக சிகிச்சை அளிக்கவில்லை. இதை பேச அனுமதி கேட்டதற்கு தான் எங்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றியுள்ளனர். சட்டமன்றத்தில் நியாயம் கிடைக்கவில்லை. சபாநாயகர் நடுநிலை வகித்திருக்க வேண்டும். ஆர்.பி. உதயகுமாரை கைது செய்யும் அளவுக்கு தூக்கி வந்து வெளியேற்றினர். இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இது ஜனநாயக படுகொலை. மக்களின் உயிர் போய் கொண்டிருக்கிறது. ஆனால் சட்டப்பேரவையில் பேச அனுமதிக்கவில்லை. ஹிட்லர் போல சர்வாதிகார ஆட்சி நடத்துகிறார்கள். சட்டமன்றத்தில் தான் இந்த விவகாரங்களைப் பேச முடியும். போதைப்பொருள் தடுப்பது குறித்து முதல்வர் ஸ்டாலின் கூட்டம் நடத்துவதாக கூறுகிறார். ஆனால் அப்படியிருந்தும் போதைப்பொருள் நடமாட்டம் குறையவில்லை. திறமையற்ற அரசாக தி.மு.க. அரசு உள்ளது. பொம்மை முதல்வராக ஸ்டாலின் உள்ளார்.

கள்ளக்குறிச்சி நகரத்தின் மையப்பகுதியில் கள்ளச் சாராயம் விற்கப்பட்டுள்ளது. பொலிஸ் நிலையம், நீதிமன்ற வளாகத்துக்கு அருகே கள்ளச் சாராய விற்பனை நடந்துள்ளது. இந்த ஆட்சியின் நிர்வாகம் எப்படி இருக்கிறது என்பதற்கு சான்று இது. உளவுத்துறை என்ன செய்கிறது?. இந்த மரணங்களுக்கு பொறுப்பேற்று முதல்வர் ஸ்டாலின் இராஜினாமா செய்ய வேண்டும். அது தான் நியாயம்.

இன்னும் எத்தனை பேர் உயிரிழப்பார்கள் எனத் தெரியவில்லை. மருத்துவமனைகளில் எத்தனை பேர் சிகிச்சை பெறுகிறார்கள் என்ற எந்த தகவலும் இல்லை. விஷத்தை முறிக்கும் மருந்துகளும் கையிருப்பில் இல்லை. 2023 ஆம் ஆண்டே கள்ளச் சாராயம் தொடர்பாக கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டுவந்தோம். அப்போதே விவாதித்திருந்தால் இவ்வளவு உயிர்கள் போயிருக்காது.

தி.மு.கவை சேர்ந்த இரண்டு கவுன்சிலர்கள் தான் கள்ளச் சாராய விற்பனையின் பின்னணியில் உள்ளனர். பொலிஸ் அதைப்பற்றி விசாரிக்கவே இல்லை. பொலிஸும் இதற்கு உடந்தை. காங்கிரஸ் உள்ளிட்ட கூட்டணி கட்சிகள் எதையும் கண்டுகொள்ளாமல் இருக்கின்றன.

இப்படிப்பட்ட சம்பவம் நிகழ்ந்த பின்னும் கூட்டணி கட்சிகள் கண்டனம் தெரிவிக்காதது வேதனையைத் தருகிறது. அ.தி.மு.க. ஆட்சியில் தூத்துக்குடியில் இருவர் கொல்லப்பட்டதாக கூறி அந்த வழக்கில் அன்றைக்கு எதிர்க்கட்சி தலைவராக இருந்த ஸ்டாலின் சி.பி.ஐ. விசாரணை கோரினார். அதே போல் கள்ளச் சாராய மரணங்களை சி.பி.ஐ. விசாரணை விசாரிக்க வேண்டும்." – என்றார்.

# பிறந்தநாள் கொண்டாட்டங்கள் வேண்டாம் த.வெ.க. நிர்வாகிகளுக்கு விஜய் உத்தரவு



கள்ளச் சாராயம் குடித்து உயிரிழந்தவர்கள் மற்றும் சிகிச்சை பெறுவோரின் குடும்பங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் உடனே செய்யுமாறு தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகளுக்கு விஜய் உத்தரவிட்டுள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், கருணாபுரம் பகுதியில் கள்ளச் சாராயம் அருந்தி 50 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் தற்போதும் அபாய கட்டத்தில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தமிழகத்தையே உலுக்கிய இந்த சம்பவத்துக்கு அரசியல் கட்சியினர் அனைவரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய், தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை உள்ளிட்டோர் கள்ளக்குறிச்சியில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர்.

இந்த நிலையில், பிறந்தநாள் கொண்டாட்டங்களைத் தவிர்த்து, கள்ளக்குறிச்சியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுமாறு விஜய் தனது கட்சி நிர்வாகிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து தமிழக வெற்றிக் கழகத்தின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

"தனது பிறந்த நாள் கொண்டாட்டங்களைத் தவிர்த்து, கள்ளக்குறிச்சியில் உயிரிழந்தவர்கள் மற்றும் சிகிச்சை பெறுவோரின் குடும்பங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் நேரடியாகச் சென்று உடனே வழங்கிட அனைத்து மாவட்ட நிர்வாகிகளுக்கும் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

எனவே அவரது உத்தரவின்படி, கழக நிர்வாகிகள், கள்ளக்குறிச்சியில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை நேரில் சந்தித்து அவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவி மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட தேவையான உதவிகளை உடனடியாகச் செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.



# வியட்நாமிற்கு விஜயம் செய்தார் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின்

உக்ரைன் போர் காரணமாக சர்வதேச அரங்கில் தனிமைப்படுத்தப்படுவதைத் தவிர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அந்த முயற்சியின் ஒரு பகுதியாக வடகொரியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இதனை தொடர்ந்து தற்போது வியட்நாமிற்கு சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

வியாட்நாமில் அந்த நாட்டு ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்திய புட்டின், ஆசிய–பசிபிக் பிராந்தியத்துக்காக நம்பகத்தன்மை வாய்ந்த பாதுகாப்புக் கட்டமைப்பு உருவாக்குவதன் முக்கியத்துவத்தை அவருடன் பகிர்ந்துகொண்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிராந்தியத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு அமைதியான முறையில் தீர்வு காணும் வகையில் அந்தக் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று இருதரப்பினரும் விரும்புவதாக அவர் குறிப்பிட்டார்.

அந்தப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் இரு தரப்பு உறவை பலப்படுத்துவதற்கான பல்வேறு ஒப்பந்தங்களில் விளாடிமிர் புடின் கையொப்பமிட்டுள்ளார்.

முன்னதாக, வடகொரிய ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்திய புடின் உலக நாடுகளில் மேற்கத்திய நாடுகள் மட்டுமே ஆதிக்கம் செலுத்துவதைத் தடுத்து, பன்முகத் தன்மை நிலவச் செய்ய தங்களது கூட்டணி உதவும் என்று தெரிவித்திருந்தார்.

இந்தச் சூழலில், வியட்நாமுடனான உறவை பலப்படுத்துவதற்கான ஒப்பந்தத்திலும் புடின் தற்போது கையொப்பமிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.





# இஸ்ரேலின் வான் தாக்குதலில் 10 பலஸ்தீன படை வீரர்கள் பலி



இஸ்ரேல் இராணுவம் காசாவின் ரபா நகரில் வணிக பொருள்களை பாதுகாத்து வந்த பாதுகாப்புப்படை வீரர்கள் மீது வான்தாக்குதல் நடத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த வான்தாக்குதலில் 10 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், உயிரிழந்தவர்கள் உடல்கள் மற்றும் காயம் அடைந்தோர் ஐரோப்பிய காசா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டன என மருத்துவமனை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் தொடர்பாக இஸ்ரேல் இராணுவம் கருத்து ஏதுவும் தெரிவிக்கவில்லை என்பதுடன், சமீபத்தில் மேற்கு கரையில் இருந்து காசா முனைக்கு வணிக பொருள்கள் கொண்டு செல்ல இஸ்ரேல் அதிகாரிகள் அனுமதி அளித்திருந்திருந்தனர்.

இதனால், பாதுகாப்புப்படை வீரர்கள் பாதுகாப்புடன் வணிக பொருள்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள காசா முனைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

கடந்த திங்கள்கிழமை இது போன்று வணிக பொருள்கள் கொண்டு சென்றபோது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டனர். இந்த நிலையில், 2 அவது முறையாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த ஒக்டோபர் மாதத்தில் இருந்து இஸ்ரேல் தாக்குதலால் 37 ஆயிரத்து 396 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என காசாவைச் சேர்ந்த சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# உலக சந்தையில் சீனி விலை பாரியளவில் குறைவடைந்தது



உலக சந்தையில் சீனியின் விலை பாரியளவில் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரேசிலில் கரும்பு அறுவடை கடந்த 4 ஆண்டுகளில் இல்லாதளவுக்கு அதிகரித்துள்ளது.

இதனால், பிரேசிலின் சீனி உற்பத்தி 11.8 வீதம் அதிகரித்ததையடுத்து உலகளாவிய ரீதியில் விலை குறைவடைந்துள்ளது.

இந்த நிலையிலேயே, சீனியின் விலை 2.32 வீதத்தால் குறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.




**ஊரலார் கேள்வி: அநுரகுமார 13ற்கு மேல் சென்று இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என யாழ் சென்று சொல்லியிருக்கிறாராமே?**

**உலக்கையார் பதில்:** இப்படி எத்தனையோ வாக்குறுதிகளைக் கேட்டுக் கேட்டு ஈழத்தமிழினத்திற்குச் சலித்துப் போய் விட்டது. ஒருதரமா? இரண்டுதரமா? ஒரே பொய்யை எத்தனை தரம் தான் இவர்கள் சொல்லப் போகிறார்கள் என்று தான் நினைக்க வேண்டியிருக்கிறது.

ஆனால் ஒன்று, இதுநாள்வரை தேர்தல் காலங்களில் இந்தப் பொய் வலையை வீசி வீசித் தமிழினத்தைப் பிடிக்கநினைத்த பெருங் கட்சிகள் இரண்டும் இன்று ஓரளவு ஆட்டங்கண்டு



போய் இருக்கின்றன. அதே நேரத்தில் ஜே.வி.பி. கட்சிக்கு சிங்கள் மக்கள் மத்தியில் ஆதரவு பெருகி வருவதாகவும் சொல்கிறார்கள். பாரதம் அநுரகுமாரவை அழைத்துப் பேசியது ஒன்றினையே அக்கட்சியின் வளர்ச்சிக்கான ஆதாரமாய் நாம் எடுத்துக் கொள்ளலாம்போல் தெரிகிறது.

பெருங்கட்சிகளை நம்பி, அவற்றுக்கு வாக்களித்து, அவர்களால் நாடு ஆட்டங்கண்டிருப்பதைக் கண்ணால் கண்டு சலித்திருக்கக்கூடிய மூத்த பேரினமக்கள், ஜே.வி.பிக்கு ஆதரவு காட்டி வரும் தம் இளைய தலைமுறையினரால் நெறி செய்யப்படுவார்களேயானால், வரும் தேர்தலில் பெருங்கட்சிகளின் கையிலிருக்கக்கூடிய 'அரச மகுடம்' ஜே.வி.பி. கட்சியின் கைக்கு மாறக் கூடிய வாய்ப்பிருப்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்நிலையில் இலங்கை அரசைப் பொறுப்பேற்கும் வாய்ப்பிருக்கக்கூடிய ஒரு புரட்சி சார் அணிக்கு, ஈழத்தமிழர் பிரச்சினையைத் தீர்க்கும் துணிவிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அது தவிர, யாரோ ஒருவரை நம்பித்தான் ஆக வேண்டும் என்ற நிலையில்தான் நாமும் இருக்கிறோம்.

புலிகளே கூட மஹிந்தவின் பொய்யை நம்பி அவரின் வெற்றிக்கான சூழ்நிலையை ஒருதரம் உருவாக்கியதாய்ச் சொல்லப்படுவதையும் நாம் மறந்துவிட முடியாது.

பெரிய கட்சிகள் ஏற்கனவே நம்மைக் கைவிட்டவை தான். அதனால் ஜே.வி.பிக்கு வாக்களித்தால் அப்பெரியகட்சியினர் பின்னாளில் நமக்கு ஏதெனும் தீமை விளைவிப்பார்களோ? என்று நாம் பயப்படவேண்டிய தேவையும் இல்லை.

ஒருவேளை இவர்களும் நம்மை ஏமாற்றத் தான் போகிறார்கள் என்றாலும் அதனால் நமக்குப் பெரிய அளவிலான புதிய நஷ்டம் ஒன்றும் விளையப் போவதுமில்லை. 'பத்தோடு பதினொன்று, அத்தோடு இதுவொன்று' என விட்டு விடவேண்டியது தான். இதையெல்லாம் கூட்டிக் கழித்துப் பாரத்தால் பொய்யோ, மெய்யோ அநுரகுமார சொல்வதை ஒருதரம் நம்பிப் பார்த்தால் என்ன என்று எண்ணத் தொன்றுகிறது.

**சல்லடையார்சலிப்பு:மயிரைக்கட்டிமலையை இழுத்துப் பார்த்துவிட வேண்டியதுதான். 'வந்தா மலை போனா மயிர்' அவ்வளவு தான் பாருங்கோ.**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**ஊரலார் கேள்வி: தமிழரசுக்கட்சி, ஜே.வி.பியின் அநுரகுமார அவர்களைச் சந்தித்திருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்? தமிழரசுக் கட்சி ஜே.வி.பிக்கு ஆதரவு வழங்குமா?**

**உலக்கையார் பதில்:** உரிமை வேண்டிநிற்கும் ஈழத்தமிழர்கள் அதனை எந்த வழியிலேனும் பெற முயற்சிப்பதில் தவறில்லை என்றே தோன்றுகிறது. ஒரு போருக்கு முகங்கொடுக்க வேண்டிய ஒருவன், எடுத்துக் கொண்ட காரியத்தைச் செய்யத் தேவையான பலம், தனக்கிருக்கும் பலம், எதிரியின் பலம், இருவருக்கும் இருக்கக் கூடிய துணையாளர்களின் பலம் என்னும் நான்கு விடயங்களையும் ஆராய்ந்து, தன்பலம் அதிகமாக இருந்தால்தான் எதிரியுடன் மோதத் தொடங்க வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

இதுவரை நம் தலைவர்கள் யாரும் இந்த யதார்த்த உண்மையைத் தெரிந்து கொண்டு செயற்படவில்லை (புலிகளையும் சேர்த்துத் தான்

தொடர்ச்சி▼

தொடர்ச்சி ▲

சொல்கிறேன்). அதனாற்தான் இதுவரை நாம் வெற்றிக்கனியைப் பறிக்க முடியாமல் தத்தளித்து நிற்கிறோம். இனியேனும் வரலாற்றைத் திரும்பிப் பார்த்து அனுபவங்களைப் பெறத் தவறுவோமானால், ஏற்கனவே பாதாளம் நோக்கிச் சென்று கொண்டிருக்கும் நம் இனத்தின் வேகத்தை அதிகரிக்கச் செய்தவர்கள் ஆவோம்.



ஆகவே, யாருடன் நட்புப் பூண்டால் நமக்கு இலாபம் வரும் என்பதை மட்டுமே இவ்விடயத்தில் கருத வேண்டுமே தவிரப் பொய்மையாக இலட்சியக் கதைகள் பேசி மீண்டும் மீண்டும் நம் இனத்தை கவிழ்க்காமல் இருக்கவேண்டியதே இன்றைய தலைவர்களின் கடமை என்று நினைக்கிறேன்.

எனவே தமிழரசுக்கட்சி, ஜே.வி.பி. கட்சிக்கு ஆதரவு அளிப்பதுபற்றி ஆராய்ந்து முடிவு செய்வதில் தவறு ஏதும் இல்லையென்றே படுகிறது.

அதனால், இது பற்றிக் கட்சி ஆராய்ந்துதான் முடிவெடுக்குமென்று பத்திரிகையாளர் சந்திப்பில் சுமந்திரன் கூறியிருப்பது சரிதான். அவர் கூறியிருக்கும் பதில் சரியானாலும் அக்காரியம் நடக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. இதுவரை அவர்களின் கட்சி ஒன்றுகூடிச் சரியான முடிவுகள் எதனையும் எடுத்ததாய்த் தெரியவில்லை. அதுதான் எங்கோ நெருடுகிறது.

**சல்லடையார் சலிப்பு: சுமந்திரன் அணி கயிற்றின் ஒரு பக்கத்தைப் பிடிக்க நினைத்தால், ஸ்ரீதரன் அணி எதிர்ப் பக்கத்தில் போய் நின்று இழுக்கும் என்பதில் சந்தேகமில்லை.**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**உரலார் கேள்வி: நித்தீஷ் குமாரையும், சந்திர பாபு நாயுடுவையும் எப்படியும் பிரித்து மோடியை நட்டாற்றில் விடலாமென இந்தியாக் கூட்டணியினர் என்னென்னவோ செய்து பார்த்தும், கடைசியில் மீண்டும் மோடி பிரதமராய் வந்திருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**உலக்கையார் பதில்:** இந்தியாக் கூட்டணி கொள்கை நோக்கிய கூட்டணியல்ல. அது பதவி நோக்கிய கூட்டணி. அவர்கள் எதிரணியைப் பிரித்து ஆட்சி அமைக்க முடிந்திருந்தாலும் கூட, அந்த ஆட்சி ஓரிரு வாரங்களுக்கு மேல் நின்று பிடித்திருக்காது என்பதை அனைவரும் அறிவார்கள். 'யார் பிரதமர்?' என்ற ஒரு கேள்வியிலேயே பதவி நோக்கி ஆசை கொண்டிருக்கும் இந்தியா அணியினர் ஆளுக்காள் 'குடுமிப்பிடி' சண்டையில் ஈடுபட்டு அக்கட்சியைச் சில்லுச் சில்லாக உடைத்திருப்பார்கள் என்பது மட்டும் நிச்சயம்.

பாரதீய ஜனதாக் கட்சிக்குள் இருக்கும் சில பெரும் முதலைகளை இந்தச் சிறு மீன்களால் ஒன்றும் செய்யமுடியாது என்றும், ஆட்பிடிப்பதில் வல்லவரான அமித்ஷா வெகுவிரைவில் மோடி அமைத்திருக்கும் புதிய அரசை வலிமைப்படுத்துவார் என்றும் விமர்சகர்கள் பலர் சொல்லி வருகிறார்கள். இன்றைய நிலையில் மோடிக்கு நிகரான தலைமைத்துவப் பண்பு கொண்ட ஒரு தலைவர் வேறு கட்சிகளுக்குள் இருப்பதாயும் தோன்றவில்லை. நாம் அவசரப்படுவானேன்? விரைவில் காலம் பதில் சொல்லத்தானே போகிறது.

**சல்லடையார் சலிப்பு: வாரிதியார் சிந்தித்ததை வைத்துச் சொல்கிறாரா? மோடியைச் சந்தித்ததை வைத்துச் சொல்கிறாரா? ஹி.ஹி.ஹி...!**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**உரலார் கேள்வி : என்னங்காணும் உங்க அண்ணாமலையாருக்குக் கடைசியில் அமைச்சர் பதவி குடுக்காமலே விட்டுட்டாங்க போல? உங்களைப்போன்ற அவரின் ஆதரவாளர்கள் எல்லாருக்கும் ரொம்பத்தான் வழியுதோ?**

**உலக்கையார் பதில்:** நான் அவரின் ஆதரவாளரா இல்லையா? என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். அண்ணாமலையாரின் ஆதரவாளர்கள் 'வழிந்து' நிற்பதாய் உங்களுக்கு யார் சொன்னது? அண்ணாமலை அவர்கள் வாக்குத் தேடலில் பதினொரு சதவீதத்திற்கு மேல் பெற்று இருபத்தாறு சதவீத வாக்கினைப் பெற்றிருக்கும் தி.மு.கவினரை, தேர்தல் 'றேசில்' வேகமாகத் துரத்தத் தொடங்கியிருக்கும் தெம்பில் அவர்கள் உற்சாக ஊழிக்கூத்தல்லவா ஆடிக் கொண்டிருக்கிறார்கள்?

தன் கட்சி, தேர்தலில் ஒரு 'சீற்றைக்'கூடப் பெறாவிட்டாலும் அண்ணாமலையார் அதுபற்றி எந்தவிதக் கவலையும் இல்லாமல் முன்பைவிட அதிக வேகமாக அல்லவா செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். அவரது செயற்பாடுகளைப் பார்த்தால் 'சிங்கத்தின் கால்கள் பழுது பட்டாலும் சீற்றம் குறைவதுண்டோ?' என்ற பழைய சினிமாப் பாடல்தான் நினைவுக்கு வருகிறது. டெல்லிக்கு மத்திய அமைச்சராய் அவர் போய் விட வேண்டும் என்று அவர் விரும்பினாரோ இல்லையோ, தமிழ் நாட்டின் மற்றைய கட்சிகள் நிச்சயமாக விரும்பியிருக்கும் என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை.

என்னைக் கேட்டால் அண்ணாமலையார் ஆளுங்கட்சியினரின் முதல் வியூகத்தை உடைத்து, இரண்டாம் வியூகத்திற்குள் நுழைந்திருக்கிறார் என்றுதான் தோன்றுகிறது. 2026இல் வரப் போகிற மாநிலத் தேர்தல் முடிவுகள்தான் அவரது முயற்சியின் வெற்றி தோல்விகளை உரைக்கும் என்று கருதுகிறேன்.

**சல்லடையார் சலிப்பு: விழுந்தாலும் அண்ணாமலையாரின் மீசையில் மண் ஒட்டவில்லை என்றுதான் வாரிதியார் சொல்லுவார் போல...**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

தொடர்ச்சி ▼

தொடர்ச்சி▲

**உரலார் கேள்வி: தமிழ்நாட்டில் விஷச் சாராயத்தை அருந்தி இதுவரை 52 பேர் மரணித்திருக்கும் செய்தியைப் பார்த்தீர்களா?**

**உலக்கையார் பதில்:** பார்த்தேன்! வருந்தினேன்! இறந்தவர்களின் குடும்பத்திற்காகப் பிரார்த்தித்தேன். அதைத்தவிர என்னால் என்னதான் செய்யமுடியும்?

ஆனாலும் என் நெஞ்சக் கொதிப்பை அடக்க முடியவில்லை. குடித்துச் செத்தவர்களுக்காக என்னால் சிறிதும் கவலைப்பட முடியவில்லை. அவர்களை நினைக்க ஆத்திரம் ஆத்திரமாய் வருகிறது. வறுமைப்பட்ட அவர்கள் குடியின் கேட்டினை உணராமல், தாமும் வருந்தியிறந்து தம் குடும்பத்தினரையும் வருத்தியிருக்கிறார்கள். இப்படி நடப்பது இது ஒன்றும் முதல்முறையல்ல. எத்தனை தரமாய் இத்தகைய தீமைகள் நடந்து விட்டன. அவற்றையெல்லாம் தெரிந்திருந்தும் குடியின் மயக்கத்தால் இந்த ஆபத்தில் அகப்பட்ட அவர்களின் அறிவை என்ன சொல்ல?

அவர்களையும் முழுமையாய்க் குற்றஞ்சாட்ட முடியாதுதான். மக்களை நெறிப்படுத்த வேண்டிய அரசாங்கமே சாராய விற்பனையைப் பெருக்குவதற்காக வீதிக்கு வீதி 'டாஸ்மார்க்' கடைகளைத் திறந்து மக்களைப் போதைப் பழக்கத்துக்கு ஆளாக்கிக் கொண்டிருக்கும்போது அறிவற்ற இவ் ஏழைகளைக் குற்றஞ் சொல்லி என்ன பயன்?

அங்குள்ள ஊடகங்கள் எல்லாம் இச் சம்பவத்தை 'விஷச் சாராய மரணம்' என்று விளம்பரப்படுத்துகிறார்கள். சாராயத்தில் நல்ல சாராயம் என்று ஒன்றும் இருக்கிறதா என்ன? எல்லாச் சாராயமும் விஷம்தான். என்னவொன்று இந்தச் சாராயத்தைக் குடித்தவர்கள் உடன் செத்தார்கள்.



மற்றச் சாராயங்களைக் குடிப்பவர்கள் மெல்லச் சாவார்கள். மற்றும்படிக்கு எல்லாச் சாராயங்களும் மரணத்தைத்தான் தரப் போகின்றன?

விஷத்தைக் குடிக்கப் பழக்குபவர்கள் விஷச் சாராய மரணங்களுக்காகக் கவலை தெரிவிப்பது வேடிக்கையிலும் வேடிக்கை.

**சல்லடையார் சலிப்பு: 'சாராயத்தை ஊத்து, ஜன்னலைத்தான் சாத்து' ஹி.ஹி..ஹி...**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

# மீன் ரின்னுக்குப் பதிலாக செமன் பக்கற் அறிமுகம்




இலங்கையில் முதல் தடவையாக தேசிய ரின்மீன் உற்பத்தி நிறுவனமான SLIC நிறுவனத்தினால் தனது நவீன தயாரிப்பான – நீண்ட நாள்களுக்குப் பழுதடையாமல் பாதுகாக்கக் கூடிய – ஒருகிலோ எடை கொண்ட ஜக் மேக்கரல் செமன் பக்கற் ஒன்று சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு நேற்று கடற்றொழில் அமைச்சில் இடம்பெற்றது.

SLIC நிறுவனத்தின முகாமைத்துவப் பணிப்பாளரான கலாநிதி கபில பாலசூரியவினால் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் சம்பிரதாயபூர்வமாக இந்த செமன் பக்கற் கைளிக்கப்பட்டதுடன் பேக்கரி உற்பத்தியாளர்களுக்கு உகந்த வகையில் இது தயாரிக்கப்பட்டுள்ளதாக பாலசூரிய அமைச்சரிடம் தெரிவித்தார்.

இதன் போது அமைச்சர் தெரிவிக்கையில், உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் நோக்கமெனவும் அதற்காக அனைத்து உதவிகளையும் அரசாங்கம் தேசிய உற்பத்தியாளர்களுக்கு வழங்க தயாராக இருப்பதாகவும் கூறி, இதற்கு SLS (இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவனம்) சான்றிதழை விரைவில் பெற்றுக் கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கினார்.

இந் நிகழ்வில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் நிசாந்த விக்கிரமசிங்க உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



# மட்டக்களப்பில் கண் அறுவைச் சிகிச்சை!

(பழுவூரான்)

மட்டக்களப்பு றோட்டறிக் கழகம் ஹெறிடேஜ் மற்றும் கொழும்பு போட் சிட்டி றோட்டறிக் கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வைத்தியர்களின் பூரண பங்களிப்போடு கண் அறுவைச் சிகிச்சை நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு றோட்டறிக் கழகத் தலைவர் கே.கௌரீஸ்வரன் தலைமையில் காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை 50 பேருக்கு இலவசமாக கண் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இந்த கண் அறுவை சிகிச்சையானது ஆஸ்திரேலியாவை சேர்ந்த மகளிர் இல்லம் மற்றும் மட்டக்களப்பு சமூக நலன்புரி அமைப்பின் நிதி பங்களிப்பின் ஊடாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.













# மன்னார் பிரதான பாலத்தடியில் செயற்பட்ட சோதனைச் சாவடி நேற்று அகற்றப்பட்டது!

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்தில் நீண்ட காலமாக மக்களை அசௌகரியத்திற்கு உள்ளாக்கி வந்த பிரதான சோதனை சாவடி மற்றும் வீதி தடைகள் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை அகற்றப்பட்டுள்ளதுடன் சோதனை நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

பல வருடங்களாக இந்தச் சோதனை சாவடியை அகற்றுமாறு கோரப்பட்டு வந்தது. இந்தச் சாவடியினால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர் எனத் தெரிவித்து மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சிவில் செயற்பாட்டாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் போராட்டங்களை முன்னெடுத்தமையுடன், சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கு சோதனை சாவடியை அகற்றுவதற்கான கோரிக்கையை கடிதங்களாகவும் மகஜர்களாகவும் வழங்கியிருந்தனர்.

இந்த நிலையில் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற விசேட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் மன்னார் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்தச் சோதனை சாவடியை அகற்றி தருமாறு நேரடியாகக் கோரிக்கை முன்வைத்தார்.

இந்த நிலையில் ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக நேற்றைய தினம் இந்தப் பாலப் பகுதியில் காணப்பட்ட வீதி தடைகள் அகற்றப்பட்டுள்ளமையுடன் சோதனை நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

இருப்பினும் அப்பகுதியில் இராணுவம் தொடர்ச்சியாக நிலை கொண்டுள்ளதுடன் இராணுவக் கட்டுமாணங்கள் எவையும் அகற்றப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.





# மலையக இளைஞர் மாநாட்டிற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது

மலையக இளைஞர் மாநாட்டை நடத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

"நாம் - 200" தேசிய வேலைத்திட்டத்திற்கு அமைவாக மலையக இளைஞர் மாநாடு நடத்தப்படவுள்ளது.

கண்டியில் மாநாடு நடைபெறவுள்ளதாக அமைச்சரவை போச்சாளர், அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

பெருந்தோட்டங்களில் வாழும் இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



# மணிலா - கட்டுநாயக்க இடையிலான விமான சேவை விரைவில் ஆரம்பம்


பல வருடங்களுக்கு முன்னர் இடைநிறுத்தப்பட்ட பிலிப்பைன்ஸின் மணிலாவிற்கும் கட்டுநாயக்கவிற்கும் இடையிலான நேரடி விமான சேவையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கைக்கான பிலிப்பைன்ஸ் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இந்த நேரடி விமான சேவையை விரைவில் ஆரம்பிப்பதற்கு தேவையான அனுமதியை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் சாகர கொட்டகதெனியவிடம் பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன், பிலிப்பைன்ஸ் சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வருகை தர எதிர்பார்த்துள்ளதாகவும் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை கடற்படையினருக்கு பயிற்சி அளிப்பதற்காக நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய பயிற்சிப் பாடசாலை ஒன்றை ஆரம்பிக்க பிலிப்பைன்ஸ் தயாராக இருப்பதாகவும் தூதுவர் அமைச்சரிடம் தெரிவித்துள்ளார் என துறைமுகங்கள், கடற்படை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

# எலிக்காய்ச்சல் ஐயாயிரம் பேருக்கு



இவ்வாண்டின் கடந்த மாதங்களில் எலிக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட 5000 பேர் நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி, கேகாலை, காலி, களுத்துறை, மாத்தறை, மொனராகலை, குருநாகல் மாவட்டங்களில் அதிகளவான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த நோயினால் ஆண்களே அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும், பெண்கள் மத்தியிலும் நோய் பரவல் அதிகரிக்க ஆரம்பித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்பு பிரிவின் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் துலானி தாபரே குறிப்பிட்டுள்ளார்.

# ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை நிகழ்நிலையில் ஜூலை 10 வரை சமர்ப்பிக்க முடியும்




உயர் தர பரீட்சைக்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் 10 ஆம் திகதி வரை நிகழ்நிலை ஊடாக சமர்ப்பிக்க முடியுமென பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, www.doenets.lk அல்லது www.onlineexams.gov.lk என்ற இணையத்தளங்களுக்குள் அல்லது பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ திறன்பேசி செயலிக்குள் பிரவேசித்து விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

இதேவேளை, அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலை மாணவர்கள் அதிபர் ஊடாக விண்ணப்பிக்க வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தனிப்பட்ட முறையில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# பொசன் பூரணையை முன்னிட்டு 289 கைதிகளுக்கு விடுதலை



நற்றைய பொசன் பூரணை தினத்தை முன்னிட்டு 289 கைதிகள் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பொசன் பூரணை தினத்தில் நாடளாவிய ரீதியில் உள்ள விகாரைகள் மற்றும் மத ஸ்தலங்களில் விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.

பக்தர்களின் பாதுகாப்பு கருதி நாடளாவிய ரீதியில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் நேற்று கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர் எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், நாடளாவிய ரீதியில் 322 பொசன் வலயங்களில் தோரணைகள் அலங்கரிக்கப்பட்டன. 4,600இற்கும் மேற்பட்ட தானசாலைகள் அமைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 22.06.2024

## மேஷம்

சம்பிரதாய விழாக்கள் மற்றும் ஆன்மீக சொற்பொழிவுகளில் கலந்து கொள்வதன் மூலம் ஆறுதல் மற்றும் நிவாரணம் கிடைக்கும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் திருப்தி நிலவும்.

பணியிடத்தில் பதற்றம் காணப்படும். பணியிடத்தில் காணப்படும் கடினமான சூழ்நிலையை கையாள அனுசரணையான போக்கை மேற்கொள்ள வேண்டும். திட்டமிட்டு பணியாற்றுங்கள்.

உங்கள் துணையின் மீது தவறான கருத்து கொண்டிருப்பீர்கள். இது உங்களுடைய உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். உங்கள் துணையுடன் நல்லுறவு காண சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பண இழப்பு ஏற்படாமல் தடுக்க நீங்கள் முன்கூட்டியே திட்டமிட வேண்டும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்ய வேண்டும்.

## ரிஷபம்

இன்று சற்று கடினமான சூழ்நிலைகள் காணப்படும். உங்கள் அணுகுமுறையில் பொறுமை மற்றும் உறுதி அவசியம். உங்கள் அன்றாட நிகழ்வுகளில் விழிப்புணர்வு தேவை.

பணியிடத்தில் மிதமான பலன்கள் காணப்படும். அதிகப் பணிகள் கவலையை அளிக்கும். அதனால் பணிகளைக் கையாளும்போது கவனக்குறைவு ஏற்படும்.

உங்கள் துணையுடன் குடும்பப் பிரச்சினை ஒன்றை சந்திக்க நேரலாம். குடும்பத்தில் அமைதி மற்றும் நல்லிணக்கம் ஏற்பட ஒருவருக்கொருவர் மனம் திறந்து பேசிக் கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

கால் மற்றும் தொடைகளில் வலி ஏற்படலாம்.

## மிதுனம்

இன்று புதிய மனிதர்களுடன் கலந்துறவாடுவீர்கள். புதிய நண்பர்களை ஏற்படுத்திக் கொள்ள இது உகந்த நாள். அனுபவப் பூர்வமான பாடம் இதன் மூலம் கற்கலாம்.

உங்கள் கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் நல்ல பலனை பெற்றுத் தரும். உங்கள் நேர்மையான அணுகுமுறை காரணமாக பணியில் சாதிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை பகிர்ந்து கொள்வீர்கள். அதன் காரணமாக உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

பணபுழக்கம் அதிகமாக காணப்படும். உங்கள் குடும்பத்துடன் வெளியே செல்லுதல் போன்ற நிகழ்ச்சிகளுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## கடகம்

இன்று சௌகரியங்களை அனுபவிக்கும் நாள். இன்றைய நாள் மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும். இன்று மன வலிமை அதிகம் காணப்படும். குறைந்த முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். உங்களின் செயல் திறன் சக பணியாளர்களை ஆச்சரியப்பட வைக்கும்.

உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். நீங்கள் இருவரும் நல்லுறவையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். இன்றைய நாளை நீங்கள் புதிய முதலீடுகள் செய்வதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்று உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## சிம்மம்

இன்று கடினமான சூழ் நிலை காணப்படும். அது உங்கள் நாளின் சீரான நிலையை பாதிக்கும். கவனமுடன் செயலாற்ற வேண்டும். தனிமை உணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. அதனை சமாளிக்க வேண்டும். அமைதி பெற பிரார்த்தனை மேற்கொள்ளுங்கள்.

அதிகப் பணிகள் காணப்படும். நற்பலன்களைக் காண நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும்.

உங்கள் துணையிடம் கருத்து வேறுபாடு கொள்வீர்கள். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்படுத்த அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் குடும்பத்துக்காகச் சில தேவையற்ற செலவுகள் செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். எனவே திட்டமிட்டுப் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்யுங்கள்.

## கன்னி

கடினமான சூழ்நிலைகளை கையாள பொறுமை அவசியம். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

பணியிடத்தில் பணிகளை மேற்கொள்ளும்போது கடினமான சூழ்நிலை காணப்படும். சக பணியாளர் களுடன் நல்லுறவு பராமரிப்பதிலும் சிக்கல்கள் காணப்படும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் நீங்கள் உணர்ச்சிவசப்படுவீர்கள். இது உறவின் சமநிலை மற்றும் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் தாயின் உடல் நிலையில் பாதிப்பு காணப்படும். அதற்காக நீங்கள் பணம் செலவு செய்ய நேரும்.

## துலாம்

இன்று மன வலிமை நிறைந்து காணப்படும். எதிர்பாராத நன்மைகள் திருப்தியை அளிக்கும். விருந்தினர்கள் வருகை காரணமாக இன்று நீங்கள் உற்சாகமாக இருப்பீர்கள்.

பணியிடத்தில் உற்சாகமான வாய்ப்புகள் காணப்படும். பணியிடச் சூழல் இனிமையாகவும் மகிழ்ச்சி கரமாகவும் காணப்படும்.

உங்கள் நேர்மையான அணுகுமுறை உங்கள் துணையை மகிழ்விக்கும். உங்கள் துணையிடம் உங்கள் அன்பை வெளிப்படுத்துவீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் பணவரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று திட ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

## விருச்சிகம்

உங்கள் இலக்குகளை அடைய இந்த நாள் அனுகூலமாக இருக்காது. அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் உங்களை வைத்திருப்பது நல்லது. இன்று திறமையாக செயலாற்ற அனுசரணையான அணுகுமுறை தேவை.

பணியில் சில தவறுகளை நீங்கள் செய்ய நேரலாம். இன்று பணியில் கவனம் மிகவும் அவசியம்.

சில கருத்து வேறுபாடு காரணமாக தவறான புரிந்துணர்வு காணப்படும். இதனால் உறவுப் பிணைப்பு சற்று பாதிப்படையும்.

இன்று நிதிநிலைமை அபாரமாக இருக்கும். கூடுதல் செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு அதிருப்தி அளிக்கும்.

இன்று உங்களிடம் பதற்றம் காணப்படும். பிரார்த்தனை மற்றும் மந்திர ஜெபங்கள் உங்கள் ஆரோக்கியத்துக்குச் சிறந்தது.

# இன்றைய ராசி பலன்கள் - 22.06.2024



தனுசு

நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம். இன்று அசௌகரியமாக உணர்வீர்கள். பொறுமையாக இருப்பதன் மூலம் நன்மை அடையலாம்.

பணியில் நீங்கள் தவறுகள் செய்ய நேரலாம். உங்கள் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும். பணியிடத்தில் உங்கள் திறமைகளை பயன்படுத்த இயலாத நிலை காணப்படும்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்ள இயலாது. எனவே பொறுமை மேற்கொள்ளுங்கள்.பேசுவதைத் தவிர்த்திடுங்கள்.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். பண இழப்பு காணப்படுகின்றது. எனவே கவனமாக பணத்தை கையாளவும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.



கும்பம்

உங்கள் மனோதிடம் மற்றும் உற்சாகம் காரணமாக இன்று சிறந்த பலன்கள் கிடைக்கும். இன்று அனைத்து விதத்திலும் சிறப்பான நாள்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிபடுத்துவீர்கள். இதனால் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நல்ல பண வரவு காணப்படுகின்றது. உங்கள் கடின உழைப்பு காரணமாக ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் பண வரவு ஏற்படும்.

உங்களிடம் காணப்படும் மன திருப்தி மற்றும் மகிழ்ச்சி காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.



மகரம்

இன்று தேவையில்லாமல் வாக்கு வாதத்தில் ஈடுபடுவீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். அமைதியாக இருப்பது நல்லது.

அதிகப் பணிகள் காணப்படும். திறமையாகப் பணியாற்ற திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். உங்கள் சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்காதது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையிடம் பொறுமையின்றி நடந்து கொள்வீர்கள். இதனால் கடுமையான விவாதங்கள் இருவரிடையே ஏற்படலாம். எனவே நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பண வரவு எதிர்பார்த்த அளவுக்கு காணப்படாது. தேவையற்ற செலவுகள் எழும். பணத்தை சாதுர்யமாக கையாள்வது கடினமாக இருக்கும்.



மீனம்

புத்திசாலித்தனத்தை சரியான நேரத்தில் பயன்படுத்துவதன் மூலம் இன்று சாதகமான பலன்கள் கிட்டும். உறுதி மற்றும் சிறப்பான திட்டம் மூலம் உங்கள் இலக்குகளை அடைவீர்கள்.

உங்கள் சிறப்பான செயல்திறன் மூலம் பணியில் வெற்றி பெறும் நிலை காணப்படும். உங்கள் பணியின் மூலம் கூடுதல் நற்பலன்கள் பெறுவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். சிறந்த தொடர்பு கொண்டிருப்பீர்கள். இதனால் அன்பும் மகிழ்ச்சியும் பெருகும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். சிறப்பாக சேமிக்க இயலும். புதிய முதலீடுகள் லாபகரமாக இருக்கும்.

மன உறுதி காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.



Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES | KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park

# சூழல் சார் சுற்றுலாத்துறையை மேம்படுத்த இலங்கை அர்ப்பணிப்புடன் இருக்கின்றது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு





"சதுப்பு நிலங்களைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துவதன் மூலம் சூழல் சார் சுற்றுலாத்துறையை மேம்படுத்த இலங்கை அர்ப்பணிப்புடன் இருக்கின்றது. காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு ஆகியவற்றுக்காக வெளிநாட்டு நிதிக்காக காத்திருப்பதில் பயனில்லை."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று முன்தினம் பத்தரமுல்லை வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் நடைபெற்ற 'WLI Asia Oceania Conference 2024' நிறைவு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சதுப்பு நிலங்களின் பாதுகாப்பு மற்றும் நிலைபேறான முகாமைத்துவம் மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில், வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினால் முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாநாடு ஜூன் 17 முதல் 21 வரை பத்தரமுல்லை தியசரு பூங்காவில் நடைபெற்றது.

"சூழல்நேய சுற்றுலாத் துறைக்கான சதுப்பு நிலங்கள் மற்றும் சதுப்பு நிலமையங்கள்" என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த மாநாட்டில், இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், கொரியா, மொங்கோலியா, பிலிப்பைன்ஸ், ஜோர்டான், மியன்மார், நியூசிலாந்து, ஜப்பான், ஆஸ்திரேலியா, சீனா, தாய்வான், ஐக்கிய இராச்சியம் ஆகிய 15 நாடுகளில் உள்ள 70 இற்கும் மேற்பட்ட சதுப்பு நிலப் பூங்காக்களில் இருந்து சுமார் 100 சர்வதேச சதுப்பு நிலப் பூங்கா பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

உலகின் முதல் நகர்ப்புற சதுப்பு நில பெருநகரமான கொழும்பு நகரைச் சுற்றியுள்ள சதுப்பு நிலங்களை 03 நாள்கள் கண்காணித்து ஆய்வு செய்யும் வாய்ப்பை இந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு வழங்கியமை இதன் சிறப்பம்சமாகும்.

இந்த மாநாட்டில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் –

"சர்வதேச சதுப்பு நிலங்கள் ஒன்றியத்தின் முதல் மாநாட்டை இலங்கையில் நடத்தக்கிடைத்தமையை அதிஷ்டமாகக் கருதுகிறேன். சதுப்பு நிலங்கள், யானைகள் மற்றும் பிற விலங்குகள் இன்று பூமியில் அழிந்து வருகின்றன.

அபிவிருத்தி மற்றும் மக்கள் தொகை அதிகரிப்பால் இன்று நாடு முழுவதும் சதுப்புநிலங்கள் குறைந்து வருகின்றன. எனவே இவற்றைப் பாதுகாப்பதில் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும். அதற்காக அனைவரும் பொதுவான இலக்குடன் ஒன்றாகப் பணியாற்ற வேண்டும்.

சுமார் 500 ஆண்டுகள் பின்நோக்கிப் பார்த்தால், இன்று நாம் இருக்கும் இந்த இடமும் அதைச் சுற்றியுள்ள பகுதியும் சதுப்பு நிலங்களால் சூழப்பட்டிருந்தது. ஆனால் படிப்படியாக அது எவ்வாறு நிரப்பப்பட்டு வந்தது என்பதைக் கண்டோம். இந்த சதுப்பு நிலங்களை நாம் பாதுகாக்க வேண்டும். தற்போதைய அரசாங்கம் அதற்கு முன்னுரிமை அளித்து வருகிறது. அதில் இந்த தியசரு பூங்காவும் ஒன்று என்று குறிப்பிடலாம்.

தற்போது தென் மாகாணத்தில் 1000 ஏக்கருக்கும் அதிகமான சதுப்பு நிலத்தை சுற்றுலாத் தளமாக மேம்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். எதிர்காலத்தில் அக்குரல பிரதேசத்தில் உள்ள சதுப்பு நிலங்களின் மற்றுமொரு பகுதியைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டங்களின் கீழ் இந்த நாட்டின் சதுப்பு நிலக் கட்டமைப்பு பாதுகாக்கப்படும் என நான் நம்புகிறேன். இதன் மூலம், நாட்டில் சூழல்நேய சுற்றுலா வர்த்தகம் உருவாக்கப்படும்.

ஹோர்டன் பிளேஸை அண்மித்து சுற்றுலா வலயம் ஒன்றை உருவாக்க நாம் மேலும் 1000 ஏக்கர்களை ஒதுக்கி உள்ளோம். எனவே, சதுப்பு நிலப் பாதுகாப்பில் கவனம் செலுத்துவதன் மூலம் சூழல் சார் சுற்றுலாத் துறையை மேம்படுத்த இலங்கை உறுதிபூண்டுள்ளது. சூழல் கட்டமைப்பு மற்றும் கடற்தாவரங்களைப் பாதுகாப்பதற்கான வெப்பமண்டல முயற்சிகளை நாங்கள் ஊக்குவிக்கிறோம். குறிப்பாக காலநிலை மாற்றத்திற்கு எதிரான போராட்டத்தில் இது ஒரு முக்கியமான காரணியாகிறது.

அமேசான் சுற்றுச்சூழல் அமைப்பு இன்று மறைந்து வருகிறது. இவற்றை நாம் பாதுகாக்க வேண்டும். சதுப்பு நிலங்கள், காடுகள், புல்வெளிகள், இவை அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டும். வர்த்தகத்திற்காக அல்ல, சுற்றுச்சூழல் அமைப்பின் ஒரு பகுதியாக இது எவ்வளவு வர்த்தக மதிப்பைக் கொண்டிருக்கக்கூடும் என்பதை நாம் பார்க்க வேண்டும்.

ஆனால் இதற்கான நிதி வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அந்த பணம் தற்போது பெரும்பாலும் உக்ரைன் அல்லது காசா பகுதிக்கு செல்கிறது. ஆனால் அது அத்துடன் முடிவதில்லை. எனவே நம்மை நாமே கவனித்துக் கொள்ள வேண்டும்.

அதன்போது, சுற்றாடல் தொடர்பான வர்த்தக திட்டங்களில் கவனம் செலுத்த வேண்டும். இந்து சமுத்திரத்தில் கார்பன் உறிஞ்சும் பகுதியாக வகிக்கக்கூடிய பங்கையும் நாங்கள் பார்க்கிறோம். இந்தப் பகுதிகளை சாதாரண அபிவிருத்திற்காக அல்லாமல் சுற்றாடல் பாதுகாப்பிற்காக இந்தப் பகுதியை வணிகமயமாக்குவது எப்படி என்பதை நாம் கண்டறிய வேண்டும். பசுமை நிதியியல் மற்றும் பசுமைப் பொருளாதாரத்திற்கு அவசியமான நிதியைப் பெற்றுக்கொள்வதில் குறித்து நாம் கவனம் செலுத்த வேண்டும்.

இன்று, வெப்பமண்டல பகுதி கடுமையான சுற்றுச்சூழல் அச்சுறுத்தலில் உள்ளது. அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் வெளிநாடுகளில் இருந்து கிடைக்கு நிதியைப் எதிர்பார்த்து பயனில்லை. எனவே, சுற்றுச்சூழலையும் வெப்ப மண்டலத்தையும் பாதுகாக்க வர்த்தக ரீதியாக சாத்தியமான திட்டங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

இலங்கை அரசாங்கம் தற்போது சர்வதேச காலநிலை மாற்ற பல்கலைக் கழகத்தை நிறுவுவது தொடர்பான சட்டத்தை உருவாக்கி வருகிறது. ஆசியாவிலேயே முதன்முறையாக இதுபோன்ற பல்கலைக்கழகம் உருவாக்கப்படுகின்றது. மேலும் இது உலகின் பிற காலநிலை மாற்ற மையங்களுடன் இணைக்கப்படும்." – என்றார்.